**மினுவாங்கொடை பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மினுவாங்கொடை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 டிசம்பருக்கு மாகாண சபை வழங்க வேண்டிய அங்கத்தவர் படியாக ரூபா 750,000 கணக்கிலிடப்படவில்லை. | கொடுக்கல் வாங்கல்கள் சரிவரக் கணக்கிலிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியாகக் கணக்கிலிடப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 159,773,625 முத்திரைக் கட்டண காசு அடிப்படையில் கணக்கிலிடப்பட்டு அக்கொள்கை வெளிப்படுத்தப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். | முத்திரைக் கட்டணம் காசு அடிப்படையில் கணக்கிலிடப்பட்டமை 2019 கணக்குகளில் வெளிப்படுத்தப்படும். |

**(ஆ) கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட 03 கணக்கீட்டு விடயங்களுக்கும் உப பதிவேடுகளுக்குமிடையே ரூபா 3,311,403 வித்தியாசம் இருந்தது. | குறித்த கணக்கு வித்தியாசம் சீராக்கல் செய்யப்பட்டு திருத்தம் செய்யப்பட வேண்டும். | பதிவேடு பரிசீலிக்கப்பட்டு திருத்தம் செய்யப்படும். |

**(இ) பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான முற்பணக் கணக்கு மீதி ரூபா 797,977 ஆகும். அதில் ரூபா 784,907 தொகையானது 2006 மற்றும் அதற்கு முற்பட்டவை ஆகும். அவற்றைத் தீர்வு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 கணக்கு தயாரிப்பின் போது திருத்தப்படும். |
| (ii) | 2015 க்கு முன்பிருந்தோ வரும் ரூபா 121,500 பெற வேண்டிய சம்பள நிதி ஏற்பாட்டைத் தீர்வு செய்யவில்லை. | பணம் அறவிடப்பட வேண்டும். | 2019 கணக்கு தயாரிப்பின் போது திருத்தப்படும். |
| (iii) | நீர் வைப்பு மீதி ரூபா 80,825 ஆகும். 04 ஆண்டுகளாக உள்ள இதனைத் தீர்வு செய்யவில்லை. | தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 கணக்கு தயாரிப்பின் போது திருத்தப்படும். |

**(ஈ) கணக்காய்விற்கான சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறையான அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்ட ரூபா 183,113 தீர்வைக்கான விபரம் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்று மீதிகளை உறுதி செய்யும் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காண்பதற்கில்லாத மற்றும் பயன்படுத்தப்படாத காரணத்தால் பதிவழிக்கப்பட்ட தொகை ரூபா 414,174 ஆகும். இதில் ரூபா 213,061 க்கு முதல் அமைச்சர் அங்கீகாரம் அளித்துள்ளார். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 129,358,930 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 21,288,135 ஆகும்.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 34,821 | 31,837 | 21,615 | 15,341 | 22,138 | 19,822 | 19,734 | 8,764 |
| (ii) | வாடகை | 2,653 | 3,962 | 4,068 | 42 | 2,363 | 2,013 | 1,869 | 148 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,800 | 1,844 | 1,858 | 27 | 1,200 | 1,786 | 1,744 | 42 |
| (iv) | ஏனைய வருமானம் | 476 | 556 | 544 | 122 | 389 | 540 | 590 | 110 |

#### 2.3.2 தீர்வையும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் மாபோதல மற்றும் பத்தடுவன உப அலுவல்கள் 02 க்குரிய சில விதிகள் தீர்வை மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்படவில்லை. | அபிவிருத்திப் பிரதேசங்களில் தீர்வை அறவிடப்பட்டு வருவாயை அதிகரிக்க வேண்டும். | உப அலுவலகங்கள் 02 க்கும் உரிய மதிப்பீட்டை விலை மதிப்புத் திணைக்களம் இதுவரை வழங்கவில்லை. |
| (ஆ) | ஜாபாலவத்தை தொழில் பேட்டையில் உருக்குத் தகட்டுக்கான மோட்டார் வாகனங்களை ஒன்றிணைக்கும் தொழிற்சாலை ஒன்றில் தீர்வை மதிப்பீடு சம்பந்தமாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. நீதிமன்றம் | தீர்வை நிலுவையை அறவிடப்பட வேண்டும். | குறித்த நிறுவனம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மதிப்பீட்டைச் சக்தி அற்றதாக ஆக்குமாறு கோரியதை |

| | | | |
|---|---|---|---|
| | திருத்தம் செய்யப்பட்ட மதிப்பீட்டை உறுதி செய்துள்ளது. 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 557,600 மீதியை அறவிட முயலவில்லை. | | நிராகரித்த நீதிமன்றத் தீர்ப்பின் பிரதிக்கமைய நிலுவையை அறவிட சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2018 சனவரி 01 இல் உள்ளவாறான தீர்வை நிலுவை ரூபா 8,763,667 ஆகும். மேலும் ரூபா 6,577,572 அதிகரித்துள்ளது. சபை முறையான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | நிலுவையை அறவிட முறையான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்வை நிலுவையை அறவிடுவதற்கு கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் 2015 - 2030 காலப்பகுதியின் போது அடைய வேண்டிய நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்திநோக்கங்களும் இலக்குகளும் இனங்காணப்பட்டு அவற்றை அமுலாக்குவதற்கு 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்திற்கும் கடப்பாடு உள்ளது. எனினும், சபையானது நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் குறிப்பாகச் சமர்ப்பிக்காததுடன், நோக்கங்களையும் இலக்குகளையும் அளவிடுவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் சுட்டிகளை இனங்காணுதல், அடிப்படைத் தரவுகளை இனங்காணுதல் மற்றும் | நிலைத்து நிற்கவல்ல நோக்கங்களும் இலக்குகளும் இனங்காணப்பட வேண்டும். | நிலைத்து நிற்கவல்ல நோக்கங்கள், இலக்குகளுக்கான திட்டம் தயாரிக்கப்படவில்லை 2019 ஆம் ஆண்டில் அது ஈடேற்றப்படும். |

வருடாந்த இலக்குகளை இனங்காணுதல் என்பன நடைபெறவில்லை.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பயன்படுத்தப்படக் கூடிய சபையின் கெப் வாகனம் ஒன்று 2018 மே 31 ஆந் திகதிக்கு பின்னர் பயன்படுத்தப்படாதிருந்தது. 2019 ஏப்ரல் 18 வரை ஒரே இடத்திலேயே தரித்து வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 யூன் 28 ஆந் திகதிய தொழில்நுட்பக் குழு பரிந்துரை பிரகாரம் இதனைப் பயன்படுத்துமாறு கோரப்பட்டிருந்தது. போதியளவு சாரதிகள் இல்லாததால் இதனை விற்பனை செய்து புதிய வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்யக் கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | பயன்படுத்தக்கூடியது என்பதால் பழுதுபார்த்தல் பயன்படுத்தப்படலாம் அல்லது சாரதிகளின் வெற்றிடத்தை நிரப்பலாம் | இவ்வாகனத்திற்கு 2017 யூன் 28 முதல் சாரதி இருக்கவில்லை. அதனால் பயன்படுத்த முடியவில்லை. எனினும், 2019 டிசம்பர் 10 வரை வருமானப் பத்திரம் பெறப்பட்டிருந்தது. 2019 மே 10 மாதாந்த கூட்டத்தில் இதனை ஏலத்தில் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டு அப்பணம் சபையின் நலனுக்குப் பயன்படுத்தப்படவில்லை. |

### 3.4 சொத்து முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களைப் பதிவு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை 38.5 பர்ச்சர்ஸ் காணியைக் கொள்வனவு செய்வதற்கு சபை ரூபா 1,400,000 மற்றும் விளையாட்டு கழகம் ஒன்று ரூபா 800,000 என வழங்கியிருந்தன. இது நிலையங்கள் சொத்துப் பதிவேட்டில் இடப்படவில்லை. | சொத்துப் பதிவேட்டில் சபையின் சொத்து பதிவு செய்யப்பட வேண்டும். | உரித்துறுதி பதிவு செய்யப்பட்டு அதன் பின்னர் நிலையான சொத்துப் பதிவேட்டிலிடப்படும். |

#### 3.4.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாரபொல பங்களாவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட சனசமூக நிலையம் 2018 நவம்பர் 10 ஆந் | சொத்துக்கள் பயனுள்ளவாறு உபயோகிக்கப் | மாரபொல பங்களாவத்தையின் சனசமூக நிலையம் தொடர்பான ஆராயப்பட்டு |

| | | |
|---|---|---|
| திகதியாகிய கணக்காய்வுத் தினம் வரை பயன்படுத்தப்படாது புதர் மண்டியிருந்தது. | பட வேண்டும். | தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.3 வருடாந்த பொருட் கணிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஏப்ரல் 18 இல் உள்ளவாறானதும் நேரடியாகப் பரிசீலனைக்கு இருந்ததுமான தார் கையிருப்புக்களுக் கிடையேயான குறைவு ரூபா 1,638,320 ஆகும். | கையிருப்புக் குறைவைக் கண்டறிந்து பொறுப்பானவர்களுக் கெதிராக நடவடிக்கை எடுப்பதுடன் கட்டுப்பாட்டு முறைமையும் திறம்பட அமைதல் வேண்டும். | 2019 ஏப்ரல் 18 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனைக்கு முன்னர் நோக்கம் இன்மையால் 2019 ஏப்ரல் 18 க்கு முன் வீதி வேலைகளுக்கு வழங்கப்பட்டதும் பெறப்பட்டதுமான தார் கையிருப்பு பேரேட்டில பதியப்பட்டதன் பின்னர் குறைவு காணப்படவில்லை. |